## சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை – சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் – சென்னை ஜி.என்.டி. சாலையில் புழல் மற்றும் உள்வட்ட சாலையில் கி.மீ. 20/8ல் ஆமுல்லை வாயில் பகுதியினை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலை அமைத்தல் மற்றும் சென்னை மறைமலை அடிகள் பாலம் இரும்புலியூர் சாலையில் கி.மீ. 17/4ல் இராஜகீழ்பாக்கம் முதல் அகரம் தென் சாலை வரை தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலையின் நில எடுப்பு முடிவடைந்துள்ள பகுதிகளில் புதிய இணைப்புச் சாலை அமைத்தல்– இவ்விரண்டு பணிகளுக்கும் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு1) துறை

அரசாணை (நிலை) எண். 64 நாள் : 16–04–2012.

திருவள்ளுவராண்டு 2043, சித்திரை – 4ம் நாள்.

படிக்கப்பட்டது:–

தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம் கடித எண்.1810/உ.பொ.1/ 2008–09, நாள் 07–02–2012.

********

ஆணை :–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம் 21–12–2011 அன்று நடைபெற்ற மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் (Meeting of the State Infrastructure and Amenities Promotion Committee) கீழ்கண்ட இரு பணிகள் மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி ஒதுக்கீட்டிலிருந்து விலக்கப்பட்டு விட்டபடியால், இவ்விரண்டு பணிகளுக்கு நெடுஞ்சாலைத்துறைக்கு ஒதுக்கப்படும் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் எடுத்து செயல்படுத்திட நிர்வாக ஒப்புதல் பெற்றுத்தருமாறு கோரியுள்ளார்.

| வ.எண் | பணிகளின் விவரம் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை ரூ .கோடியில் |
|---|---|---|---|
| 1. | சென்னை ஜி.என்.டி. சாலையில் புழல் மற்றும் உள்வட்ட சாலையில் கி.மீ. 20/8ல் ஆமுல்லை வாயில் பகுதியினை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலை அமைத்தல். | 4.00 | 20.00 |
| 2. | சென்னை மறைமலை அடிகள் பாலம் இரும்புலியூர் சாலையில் கி.மீ. 17/4ல் | 4.00 | 25.00 |

| | | | |
|---|---|---|---|
| | இராஜகீழ்பாக்கம் முதல் அகரம் தென் சாலை வரை தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலையின் நில எடுப்பு முடிவடைந்துள்ள பகுதிகளில் புதிய இணைப்புச் சாலை அமைத்தல். | | |

கோரப்படும் நிர்வாக ஒப்புதல் பணிகள் ஒரே ஆண்டில் முடிவடையாது என்பதால் பின்வரும் வகையில் நிதி மேலாண்மை செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

| நிதி ஆண்டு | உத்தேச செலவினம் |
|---|---|
| 2012 –13 | ரூ.5.00 கோடி |
| 2013 –14 | ரூ.30.00 கோடி |
| 2014–15 | ரூ.10.00 கோடி |
| **மொத்தம்** | **ரூ.45.00 கோடி** |

2. மேற்கண்ட நிலையில் தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம் அவர்களின் கருத்துருவை நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று (i) சென்னை ஜி.என்.டி. சாலையில் புழல் மற்றும் உள்வட்ட சாலையில் கி.மீ. 20/8ல் ஆமுல்லை வாயில் பகுதியினை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலை (4.00கி.மீ)அமைத்தல் பணிக்கு அரசு ரூ.20.00 கோடிக்கு, (ரூபாய் இருபது கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்தும் மற்றும் (ii) சென்னை மறைமலை அடிகள் பாலம் இரும்புலியூர் சாலையில் கி.மீ. 17/4ல் இராஜகீழ்பாக்கம் முதல் அகரம் தென் சாலை வரை தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலையின் (4.00 கி.மீ) நில எடுப்பு முடிவடைந்துள்ள பகுதிகளில் புதிய இணைப்புச் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.24.00கோடிக்கு (ரூபாய் இருபத்தி நான்கு கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்தும் அதனுடன் 2.5 சதவிகிதம் தொழிலாளர் நலநிதி மற்றும் இதர செலவினங்களை மேற் கொள்ளவும் நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. இப்பணிக்கான செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.
5054– சாலைகள்,பாலங்கள் குறித்த மூலதனச் செலவு– 80–பொது– 800 ஏனைய செலவு– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II – மாநிலத்திட்டம் –JW– சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம்– சென்னை மாநகரில் பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்துதல்– 16 பெரும்பணிகள் (து.தொ.கு.5054–80–800–JW –1608)

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் “புதுப் பணி” (New Service) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency fund) முன் பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். ஏதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட

படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) நெடுஞ்சாலைத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்

5. மேலும், இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி(பொ.ப–1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) நெடுஞ்சாலைத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண். 278/JS(PU)/ பொ.ப.1/2012 நாள்11–04–2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.52 (ஐம்பத்திரண்டு) –ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கி. ராமசந்திரன்
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
தலைமைப் பொறியாளர்(பெருநகரம்) நெடுஞ்சாலைத் துறை, சென்னை–16
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.

<u>நகல்</u>:–
நிதி (பொ.ப.I / வ.செ.பொது I & II) துறை, சென்னை–9.
அனைத்து திட்டப்பிரிவுகள் நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி)அவர்களின், நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்) அவர்களின், நேர்முக உதவியாளர், சென்னை–9.
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சென்னை–9

உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.